# இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை

## பணியாளர் வெற்றிடங்கள்

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை (CAASL) மூலோபாய திட்டமிடல், தொழில்முறை வழிகாட்டுதல் மற்றும் கடுமையான கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் நன்கு நிறுவப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பின் கீழ், தேசிய சட்டத் தேவைகள் மற்றும் சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு (SARPs) இணங்க பாதுகாப்பான திறமையான வழக்கமான மற்றும் சுற்றுச்சூழல் நட்புடன் தேசிய சிவில் விமானச் சேவை அமைப்பின் செயல்பாட்டை உறுதி செய்கிறது. இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையானது பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் சிறந்த தகுதி மற்றும் விரிவான அனுபவத்தைக் கொண்ட ஆற்றல் மிக்க, அனுபவமுள்ள மற்றும் சுய உந்துதல் கொண்ட பணியாளர்களைத் தேடுகின்றது.

### பணிப்பாளர் (நிதி மற்றும் வருமான முகாமைத்துவம்)
### Director (Finance and Revenue Management)

**பதவிக் குறியீடு HM-1-1-D10 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (HM 1-1) - ரூபா 80,295 – 15 x 2,270 -114,345 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)**

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 173,595.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

| வெளிவாரி விண்ணப்பதாரிகள் | உள்வாரி விண்ணப்பதாரிகள் |
|---|---|
| இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல், வர்த்தகம், முகாமைத்துவம் அல்லது நிர்வாகத் துறையில் மூன்று (03) வருட காலத்தைக் கொண்ட இளமாணிப் பட்டம்<br>அத்துடன்<br>நிதி முகாமைத்துவத் துறையில் பட்டப் பின்படிப்பு (Masters') பட்டத் தகைமை அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்<br>மற்றும்<br>கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் நிதி முகாமைத்துவம் அல்லது கணக்காய்வுத் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் அனுபவம். | **விருப்பத் தேர்வு 1**<br>வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்<br>**விருப்பத் தேர்வு 2**<br>பின்வரும் அனைத்தையும் திருப்தியான வகையில் பூர்த்தி செய்திருத்தல்<br>1. நிதி முகாமைத்துவம் அல்லது கணக்காய்வுத் துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலத்தை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்<br>2. கடந்த ஐந்து (5) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு, மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்<br>3. கடந்த ஐந்து (05) வருடங்களுக்கான வருடாந்த செயற்றிறன் மதிப்பீட்டில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல். |

### சிரேஷ்ட சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (ஆளணி உரிம பரீட்சைகள் மற்றும் தரநிலைகள்)
### Senior Civil Aviation Inspector (Personnel Licensing Examinations and Standards)

**பதவிக் குறியீடு MM-1-1-PL1 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (MM 1-1) - ரூபா 53,175 -10 x-1,375 -15 x 1,910 - 95,575 - 02/2016(I) (முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)**

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 143,475.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு மற்றும் முகாமையாளர்களுக்கான கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 85,000.00 ரூபா.
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

| வெளிவாரி விண்ணப்பதாரிகள் | உள்வாரி விண்ணப்பதாரிகள் |
|---|---|
| **விருப்பத் தேர்வு 1**<br>இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் பௌதிகவியல், போக்குவரத்து, வான்பரப்பு, தகவல் மற்றும் தொலைத்தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லது பொறியியல் துறையில் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம் அத்துடன் அரசாங்கத் திணைக்களம் / பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் இயைபுடைய துறையில் நிறைவேற்றுத் தரத்தில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத தகைமைக்குப் பின்னரான அனுபவம்<br>**விருப்பத் தேர்வு 2**<br>பதவி தொடர்பான விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அரசாங்கத் திணைக்களம் / பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் இயைபுடைய துறையில் நிறைவேற்றுத் தரத்தில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத தகைமைக்குப் பின்னரான அனுபவம்<br>**விருப்பத் தேர்வு 3**<br>மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / வாழ்தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் 7ஆம் நிலைக்குக் குறையாத தேசிய தொழிற்றிறன் தகைமை தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் அரசாங்கத் திணைக்களம் / பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் இயைபுடைய துறையில் நிறைவேற்றுத் தரத்தில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத தகைமைக்குப் பின்னரான அனுபவம் | **விருப்பத் தேர்வு 1**<br>வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்<br>**விருப்பத் தேர்வு 2**<br>சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (ஆளணி உரிமம் - பரீட்சைகள்), சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (ஆளணி உரிமம் - தரநிலைகள்), சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (ஆளணி உரிமம் - விமான பணியாளர்), சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (ஆளணி உரிமம் - விமானப் பணியாளர் அல்லாத), சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (ஆளணி உரிமம் - பறக்கும் பயிற்சி) என்பவற்றில் ஏற்புடையதில் குறைந்தபட்சம் ஆறு (06) வருட கால சேவை அனுபவம்.<br>**மற்றும்**<br>கடந்த ஆறு (06) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்<br>**மற்றும்**<br>விமான போக்குவரத்து முகாமைத்துவ துறையில் நான்கு (04) வாரங்களுக்குக் குறையாத ICAO ஒப்புதல் அளிக்கப்பட்ட பயிற்சிக் கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>**மற்றும்**<br>வருடாந்த செயற்றிறனில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல். |

**வயதெல்லை**

| பதவிகள் | வயதெல்லை | குறிப்புகள் |
|---|---|---|
| பணிப்பாளர் | 35 - 55 வயதுக்கிடையில் | ஏற்கனவே இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் பணியாற்றுபவர்கள், இலங்கை விமானப்படை, விமான நிலையம், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம், உள்ளூர் விமான சேவைகள் அல்லது பறக்கும் பாடசாலைகள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |
| சிவில் விமானசேவை பரீட்சகர் | 22 - 45 வயதுக்கிடையில் | |

- மேலதிக தகவல்கள், பதவி விபரங்கள், விசேட தொழில்நுட்பக் கொடுப்பனவிற்கான தேவைப்பாடுகள் மற்றும் நிலையான விண்ணப்பப் படிவத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் www.caa.lk எனும் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்
- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த பதவி/பதவிகளுக்காக தகுதியை நிரூபிக்க தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கான ஆவண ஆதாரங்களின் பிரதிகளுடன் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்
- நிலையான விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலும் சேவை செய்யும் விண்ணப்பதாரர்கள் நிறுவனத்தின் தலைவர் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.
- உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரிக்கு 2024-05-27ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபால் மூலம் employment@caa.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அவை அங்கீகரிக்கப்படும்.
- விண்ணப்பங்களை சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை, இல. 152/1, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
- தகுதித் தகைகைளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வு / பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

**சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை,**
**இல. 152/1, மினுவாங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**
**2024-05-14.**